செய்தி வெளியீடு: 426 26.5.2010

## சத்திஸ்கர் மாநிலத்தில் நக்சலைட்டுகள் தாக்குதலில் வீரமரணம் அடைந்த தமிழகத்தைச் சேர்ந்த தலைமைக் காவலர் குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையைச் சேர்ந்த மத்திய ரிசர்வ் காவல் படையின் தலைமைக் காவலர் எம். சுப்பிரமணியன், சத்திஸ்கர் மாநிலம் பீஜப்பூர் மாவட்டத்தில் 8.5.2010 அன்று நக்சலைட்டுகள் நடத்திய தாக்குதலில் வீரமரணம் அடைந்தார்.

மறைந்த தலைமைக் காவலர் எம். சுப்பிரமணியத்தின் தியாகத்தைப் போற்றி, அவரது குடும்பத்தார்க்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (26.5.2010) ஆணையிட்டுள்ளார்.

***

வெளியீடு:

இயக்குனர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை 9.